முருகப்பெருமான் துணை

**மகான் கேதுபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.09.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானமாக நிறைந்த அரங்கனே
   ஞானிகளை படைக்கும் தேசிகனே
   தானதரும மகா சக்திக்குள்
   தரணியே மூழ்க வேண்டுமென அருளும்
2. அருளும் மூலனே அகத்தியனே
   அனைத்துமான ஆறுமுகப் பெருமானே
   பெருமைபட உன் புகழை பாடி
   புகலுவேன் அருளாசி தன்னை
3. தன்னையே கேதுபகவான் யானும்
   தக்க சுபகிருது நங்கை திங்கள்
   நன்னயமாய் முதல் திகதி கதிர்வாரம்
   **(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள், 18.09.2022 ஞாயிற்றுக்கிழமை)**
   ஞாலமதும் அரங்கர் மயமாக உரைப்பேன்
4. உரைக்கவே உண்மை வழிதனை
   உயர்வாக அரங்கன் அருளியும்
   கரையேற வழி தேடா மாயையுள்
   கலந்து கரைந்து வாழும் மானிடா
5. மானிடா மண்பொன் பெண் ஆசை
   மரணம் அழிவுத் தருகின்ற
   கனிவிலா பேராசை பற்றைவிட்டு
   கலித்துன்பம் மாய்க்கும் முன்னே
6. முன்னரே ஞானவழிக்கு வா
   முழுமைதரும் சக்தியான ஞானிகளை
   மண்ணுலகில் தேடிக் கலந்து
   மன அடக்கம் பொறிபுலனடக்கம்
7. அடக்கம் பல கண்டு உயர
   ஆறுமுகா அரங்கா என முனகு
   அடக்கமாகும் ஐம்பொறிபுலனுமே
   ஆசைவிட்டு இயல்பாய் ஒடுங்கி
8. ஒடுங்கியே உன்னுள் சோதியை
   ஓங்காரம் பாடி எழும்பும்
   நடுங்கும் ஓடும் உன் கரும வினைகள்
   நமனே உன்னை அனுகா ஏகி நிற்பான்
9. நிற்பாய் வந்த நோக்கறியவே
   நீதி வழியில் நடப்பாய் கிடப்பாய்
   அற்புதம் அற்புதம் என்று மகிழ
   ஆறுமுகன் ஏகாந்தம் தந்தருள்வார்

10. அருளவே பிறவா பெரும் கீர்த்தி
அருட்தயவாய் வாழ்ந்து பல சித்தி
பெரும் மக்கள் கண்டு தேறுவர்
பிரம்ம இந்த சூட்சுமம் அறிய

11. அறியவே குருவருள் தேடு
அரங்கனே அந்த மகத்துவ குரு
அரிசிவம் அனைத்துமான குரு
அடிபணிய அனைவருக்கும் வீடுபேறு
அருளாசி முற்றே

–சுபம்–